தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் ௪௫	திருவள்ளுவர் யாண்டு ௨௦௦௩ விரோதிகிருது, பங்குனி (1972 — மார்ச்சு — ஏப்ரல்)	மலர் ௰௨

பாவைப் பாட்டு

டாக்டர். சோ. ந. கந்தசாமி, எம். ஏ., எம். லிட்., பிஎச். டி.
தமிழ் விரிவுரையாளர்,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

இறையுணர்வும் வானநூல் அறிவும் வாய்ந்த பண்டைத் தமிழர் திங்கள்தோறும் நிறைநாளில் சிறப்பொடு பூசனை செய்து வந்தனர். திங்களும் நாளும் தமிழர் வாழ்வில் சிறப்பிடம் பெற்றமைக்குத் தொல்காப்பியமே சான்றாய் உள்ளது. கார்த்திகைத் திங்களில் கார்த்திகை நாளில் கொண்டாடிய சுடர்த் திருவிழாவினை அகநானூற்றிலும் சீவகசிந்தாமணியிலும் காணலாம். சித்திரைத் திங்களில் சித்திரை நாளில் இந்திரவிழா எடுத்ததைச் சிலப்பதிகாரம் உணர்த்துகிறது. ஆவணி அவிட்டமே, பங்குனி உத்தரமே எனவரும் இறையனார்க் களவியலுரை நிறைநாளில் நிகழ்ந்த திருவிழாக்களை நினைப்பூட்டுகிறது. வைகாசி விசாகத்தில் புத்தன் பிறந்த நாட்சிறப்பினை மணிமேகலை சுட்டுகிறது. இப்படியே மார்கழித் திங்களில் நிறைநாளாகிய ஆதிரையில் சிவபிரானின் வழிபாடு தொன்றுதொட்டு கொண்டாடப் பெற்றிருத்தல் வேண்டும். என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன.

சிவபிரானுக்கு நாள் உண்டா? எல்லா நாளும் கோளும் அண்டங்களும் படைத்தருளிய இறைவனை ஒரு குறிப்பிட்ட நாளாகிய திருவாதிரைக்கு உரியவன் என்று கூறுவது விந்தையாகவே உள்ளது. இதனை முத்தொள்ளாயிரப் புலவன்,

> "மன்னிய நாள்மீன் மதிகனலி என்றிவற்றை
> முன்னம் படைத்த முதல்வனை — பின்னரும்
> ஆதிரையான் ஆதிரையான் என்றே அயருமால்
> ஊர்திரை நீர் வேலி யுலகு"

என்று நகையுறப் பாடினன். எனினும் வானப் பாதையில் ஆதிரையினை உன்னிப்பாக உற்று நோக்கிய பழந்தமிழர் அஃது ஆடல்வல்லானின் தோற்றத்தினை ஒத்திருத்தலின், அந்நாள் அவ்விறைவனுக்கு உரியதெனக் கொண்டு, ஏத்திய திறம் எண்ணி மகிழ்தற்கு உரியது. ஆருத்திரன் என்ற சொல்லில் ஆதிரை என்ற நாள் பெயரும் உருத்திரன் என்ற இறை பெயரும் பொதிந்து இருத்தல் காண்க. பரிபாடலில் உருத்திரர் பதினொருவரைக் குறிக்கும் நல்லந்துவனார்,

> "ஆதிரை முதல்வனிற் கிளந்த
> நாதர் பன்னொருவரும்"

என்று பாடுகிறார். ஆதிரை முதல்வன் என்ற பெயரால் பழந் தமிழர் சிவபிரானைக் குறித்தனர். நல்லந்துவனாரே கலித்தொகை யில் ஆதிரை இறைவனின் செவ்வண்ணம்போல் செண்பக மலர் பூத்துப் பொலியும் வனப்பினை,

> "அரும் பெறல் ஆதிரையான் அணிபெற மலர்ந்த
> பெருந்தண் சண்பகம் போல" (கலி. 150)

என்று இயம்புகிறார்.

சங்க காலத்தில்: ஆதிரை வழிபாடு பரிபாடலில் (11) விரி வாக விளக்கப்படுகிறது. மார்கழித் திங்களில் வைகறைப் பொழுதில் ஆகமம் அறிந்த அந்தணர் ஆதிரையானுக்குரிய விழாவை ஆற்றத் தொடங்கினர். புலரித் துயில் நீங்கிய இளம் பாவையர் உலகம் மழையாற் குளிர்க என்னும் பரந்த மனத் துடன் இறைவனை ஏத்தி வையை ஆற்றில் பனி நீராடினர். பின், கரையோரம் அந்தணர் வளர்த்த சுடரில் ஈர ஆடைகளை உலர்த்தினர். ஏற்போர்க்கு இட்டனர். நீராடும் இளம் பெண் கட்கு உறுதுணையாய்த் தாய்மாரும் உடனிருந்தனர். இவ்விழா தைத்திங்களிலும் தொடர்வதால் தைந்நீராடல் என்றும் குறித் தனர். ஐங்குறுநூறு, கலித்தொகை, நற்றிணை, முதலிய சங்கப் பாக்களில் இந்நீராடல் குறிக்கப்படுகின்றது.

பல்லவர் காலத்தில்: பிங்கலந்தை நிகண்டில் இளம்பெண் டிர்க்கு உரிய நிகழ்ச்சிகளாகப் "பனிநீர் தோய்தலும் பாவை யாடலும்" குறிக்கப்படுகிறது. பழந்தமிழர் கொண்டாடிய ஆதிரை விழா புதுப்பொலிவுடன் பல்லவர் காலத்தும் தொடர்ந்து நிகழ்ந்தது. கி. பி. 6, 7-ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த அப்பர் பெருமான் திருவாரூரில் மணிப்புற்றில் வாழும் மாமணியைக் கும்பிட்டுத் திருப்புகலூர் நோக்கி வருகிறார்.

அங்கு, முருகநாயனாரின் திருமடத்தில் வைகிய ஞானசம்பந்தப் பெருமான் திருக்கூட்டம் புடைசூழ அப்பர் பெருமானை எதிர் கொண்டு வரவேற்கிறார். "நீர்வருநாளில் திருவாரூர் நிகழ் பெருமை வகுத்துரைப்பீர்" எனக் கேட்ட பிள்ளைக்கு, ஆரூரில் ஆதிரைத் திருவிழா பெருஞ் சிறப்புடன் நிகழ்ந்த பெற்றியை "ஆதிரைநாளால் அதுவண்ணம்" என முடியும் பதிகத்தால் உணர்த்தினார். அவர் முதலில் பாடிய திருவாரூர்ப் பதிகத்திலும் "ஆர்திரை உடையான்" என்று ஆண்டவனைக் குறிப்பதால், அக்காலத்துத் திருவாரூரில் அவ்விழா மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றிருத்தல் வேண்டும்.

ஞானசம்பந்தரும் பாவைப் பாட்டுப் பாடியிருக்கிறார். என்பைப் பெண்ணுருவாக்கிய சித்தராகிய ஞானப்பிள்ளை, திருமயிலாப்பூர்த் திருப்பதிகத்தில்"

'கார்திரை சோலைக் கபாலீச்சுரம் அமர்ந்தான்
ஆர்திரைநாள் காணாதே போதியோ பூம்பாவாய்"

என்று மயிலாப்பூரிலும் இவ்விழா நிகழ்வினைக் குறிப்பிட்டுள்ளார். எனவே, ஆண்டாள், மாணிக்கவாசகர் காலங்கட்கு முன்பே தொன்றுதொட்டு நின்று நிலவும் திருவிழா ஆதிரைப் பெருவிழா என அறிகிறோம்

வைணவ நெறியினராயினும் சிவபிரானுக்குரிய நன்னாளைச் சுட்டித்தான் திருப்பாவையினைத் துவக்குகிறார் ஆண்டாள் நாச்சியார். அரிமேல் அன்புபூண்ட பரிமேலழகரே, "அத்திருவாதிரைக்குத் தெய்வமாகிய இறைவனுக்கு விழாவைத் தொடங்க" (பரி. 11. 77-78) என்று எழுதினார். சமணர் பாடிய பாவைப் பாட்டு ஒன்றுதான் கிடைத்திருத்தலின், அவர்கள் எந்நாளில் கொண்டாடினர் என்பதைத் துணிதற்கு இல்லை.

பாவைப் பாடல்களின் நோக்கம்: அறியாமை, ஆணவம், என்ற வல்லிருளில் உறங்கிக் கிடக்கும் ஆன்மாக்களை அவ்விருளின் நீங்கியெழுந்த பக்குவ ஆன்மாக்கள் எழுப்பிச் சென்று இறையருள் இன்பப் பொய்கையில் குளித்தலைப் பாவைப் பாடல் உள்ளுறைப் பொருளாய் உணர்த்தும் என்ப. எனினும், புறச்சமய இருளில் கவிழ்ந்து கிடந்த தமிழகத்தைத் தட்டியெழுப்பி, வீடுவீடாகச் சென்று இளம் உள்ளங்களைத் திரட்டிக் கொண்டு இறைவன் புகழை வீதிதொறும் பாடி நீராடி இறையுணர்ச்சியைப் பரப்பிய இயக்கப் பாடல்கள் என்றும் பாவைப் பாடல்களை எண்ணலாம்.

புலரிப்பொழுதில் விழித்துப் பொய்கையில் குளித்தால் பாவம் போகும் என்ற எண்ணமும் தொன்று தொட்டே உண்டு சிவன் பெயர் பூண்ட பட்டினப்பாலைப் பாவலன்,

"தீதுநீங்கக் கடலாடியும்
மாசுபோகப் புனல்படிந்தும்" (99—100)

என்று குறிக்கிறான். கடலாடினால் தீவினை தீரும், காவிரிப் புனலாடினால் மாசு போகும் என்ற நம்பிக்கை மிகவும் பழமை வாய்ந்ததுதான். யூதர்கள் கூட ஜோர்டான் ஆற்றில் குளித்தால் பாவங்கள் கழுவப்பெறும் என நம்பினர். ஏசுபிரான் அவர்களைப் பார்த்து, "யூதர்களே, பரலோகத்திலிருக்கும் பரமபிதாவின் கருணை உங்கட்குக் கிட்ட வேண்டுமாயின், நீங்கள் செய்த பாவங்களை எண்ணி உருகி உருகிக் கண்ணீர் பெருக்கி அந்நீரில் குளித்தெழுங்கள்" என்று அருளினான். வடலூர் வள்ளலார், இறைவனை நினைந்து நினைந்து உருகி உருகிக் கண்ணீரால் நனைந்து அருட் புகழைப் பாடியாடின் மரணமிலாப் பெருவாழ்வில் திளைக்கலாம் என்றனர். அப்பர்கூட, புறப்பூசனையால் இறையருள் எய்த இயலாமையினை,

"கங்கை ஆடிலென் காவிரி ஆடிலென்
கொங்குதண் குமரித் துறை ஆடிலென்
பொங்குமாக் கடல் ஓதநீர் ஆடிலென்
எங்கும் ஈசன் எனாதவர்க்கு இல்லையே"

என்று குறிக்கிறார். கவிமணி,

"நித்தம் நித்தம் நீராடி நெடுமால்அருளைப் பெறலாமேல்
தத்தும் தவளை மீன்களும் அத் தனிப்பே றடைய
வேண்டாவோ"

என்று கேட்கிறார் இவருள் யாரும் நாத்திகர் இல்லை. எனினும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன அரும்பு, மலர், காய், கனி எனப் படிப்படியாக வளர்ந்து முதிரவேண்டியவை. எனவே, நன்றாக உறங்கிக் களைப்பாறிய உள்ளம் குளிரிடைப் புலரிப் பொழுதில் விழித்தெழுங்கால் மனச்செம்மையுடனும் ஒருமையுணர்வுடனும் இறைவனை எண்ண வாய்ப்பாகி நீராடுங்காலும் அவன் அருட்பொய்கையில் ஆடுவதாகப் பாவித்து இறைவன் புகழ்பாடல் மிகவும் தேவையே. பாவனை தான் இறையருள் எய்த வழி. "பாவனை அதனைக் கூடில் அவனையும் கூடலாமே" என்பது ஆழ்வார் அருள்மொழி.

திருப்பாவையும், திருவெம்பாவையும்:

1. **மழை:** பாவைப்பெண்கள் இளையராயினும் நாடு செழிக்க வேண்டும் என்ற உயர்நோக்கத்தில் மழை பொழிய இறைவனை வேண்டுகின்றனர்.

ஆண்டாள்,

> "தீங்கின்றி நாடெல்லாம் திங்கள்மும் மாரிபெய்து
> ஓங்கு பெருஞ்செந்நெல் ஊடு கயலுகள.........
> வாங்கக் குடம்நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்
> நீங்காத செல்வம்"

நிறைய வேண்டுகிறார். மழை பொழியும் காட்சிகூட கண்ணன் மயமாகவே காண்கிறார். அவன் உருவம் போல் கறுத்து, சக்கரப்படைபோல் மின்னி, வலம்புரிபோல் முழங்கி சாரங்கவில் பொழியும் சரங்களைப்போல் உலகம் வாழவும் மார்கழி நீராடவும் மழை பொழியப் பிரார்த்திக்கிறார் (4) மழைக்குச் சரங்களை உவமை கூறியது வடிவம், வண்ணம், காரணமாக என்றாலும் இறைவனின் மறக்கருணையும் குறித்தவாறு ஆம். ஆயின், மாணிக்கவாசகர் கடல்நீரை முகந்து கருக்கொண்ட கொண்டல் உமையம்மையின் நிறம் போல்? கறுத்து, அவள் இடைபோல் மின்னி, அவள் சிலம்பொலித்தல்போல் இடி முழங்கிப் புருவம்போல் வானவில் வளைத்து அருள் சுரப்பது போல் மழைபொழிய வேண்டும் என்று அமைக்கிறார் (16). இங்குத தாயாரின் அருள் எல்லாரையும் உய்விப்பதுபோல் மழையும் உய்விக்கும் என்றதால் அறக் கருணையினைச் சுட்டினார். மழையின்றி வாழ்வில்லை. வழிபடும் இல்லை. வான்சிறப்பு என்று வள்ளுவர் அமைத்தலும் "மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்" என்று இளங்கோ இசைத்தலும், "மலிதுளி பொழிய ஒருகை" என நக்கீரர் நவிறலும் எண்ணிப் பார்க்க. இயற்கைப் பொருள்களை நோக்கும் மெய்யன்பர்கள் இறை மயமாகவே காணும் எழில் எண்ணி இன்புறத்தக்கது. நோக்குவ எல்லாம் அவையே போறல் என்பர் தொல்காப்பியர். பொய்கையில் பூத்திலங்கும் குவளை மலர்களும் தாமரை மலர்களும், குருகுகளும் அரவங்களும் கூட அம்மையப்பரையும் அவர் அணிந்திருக்கும் சங்கு வளையல், பணியாபரணங்களையுமே அன்பர்கட்கு நினைப்பூட்டுகின்றன. (13)

2. **இல்லற இன்பம்:** பாவைப்பெண்கள் நாட்டு நலம் கருதியது ஒப்பவே வீட்டு நலம் கருதியும் வேண்டினர். ஆண்டாள்,

"ஊனிடை ஆழிசங்கு உத்தமர்க்கு என்று உன்னித் தொழுத என்தட முலைகள் மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன் கண்டாய் மன்மதனே" என்ற வைராக்கிய வாழ்வினைக் குறிக்கோளாகக் கொண்டமையின், பாவைப் பெண்கள் கண்ணனையே அடைந்து அவனுக்கே பணிவிடை செய்ய விழைகின்றனர். ஆண்டவனே அம்மையப்பராக அமைந்து ஆன்மாக்களுக்குச் சகல நிலையைக் கொடுத்துச் சுத்த நிலையாகிய பெத்த நிலையைப் பெற வழிகாட்டுகிறான். எனவே. திருவெம்பாவைப் பெண்கள் சிவப்பணியாளரையே இலட்சியத்தலைவராய் எய்தி அவர்க்கும் ஆண்டவனுக்கும் பணிபுரிய வேண்டுகின்றனர் :

"உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவர் ஆவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்"
"எம்கொங்கை நின்அன்பர் அல்லார்தோள் சேரற்க"

3. **பேரின்பம்**: பொறி, புலன்களின் துணையால் பெறும் இம்மையின்பத்திலும், உயிரனுபவமாய்ப் பெறும் அழியாப் பேரின்பம் ஆகிய வீட்டின்பமே பாவைப் பெண்களின் இறுதிக் குறிக்கோள் ஆகும். சமண, பௌத்தம் ஆகிய புறச்சமயம் பெண்களுக்கு வீடுபேற்றினை மறுத்தது; பெண்கள் ஆண் பிறப்பு எடுத்துப் பிறவி விடுதலை பெறுதல் வேண்டும் எனப் பேசிற்று. ஆயினும் சைவ வைணவங்களில் இருபாலாரும் வீடுபேற்றிற்கு உரிமையுடையவர் என்ற கோட்பாடு நிலைபெற்றது "மற்றை நம் காமங்கள் மாற்று" என ஆண்டாள் குறிப்பாக உணர்த்தினார். மாணிக்கவாசகர், "ஆர்த்த பிறவித் துயர்கெட நாம் ஆர்த்தாடும் தீர்த்தன்" என்று விரிவாகக் குறிப்பிடுவர். பிறவார் உறுவதுதான் பேரின்பம். அதற்கு உபாயம் அவன் அருட்பொய்கையில் ஆடுதலேயாம்.

இரண்டு பாவைப் பனுவல்களையும் ஒப்பிட்டு நோக்கின் மேலும் சில சிறப்புக்களை அறியலாம்.

அவதாரம் — கண்ணன். திருமால் மக்களைப் புரத்தற்கு எடுத்த அவதாரங்கள் பல. திருப்பாவையில் ஆண்டாள் சிறப்பாகத் திருவிக்கிரமன், இராமன், கண்ணன், என்ற அவதாரங்களைப் பாடுகிறார். பலதேவன் அவதாரம் கண்ணன் அவதாரத்திலும் வாமனன் அவதாரம் திருவிக்கிரம அவதாரத்துடனும் இணையும். ஓங்கி "உலகளந்த உத்தமன்" என்றும், "அன்றிவ்வுலகம்

அளந்தாய் அடிபோற்றி'' என்றும் திருவிக்கிரமனைக் குறிப்பிடுகிறார். "சென்றங்குத் தென்னிலங்கை செற்றாய் திறல் போற்றி" என்று இராமாவதாரத்தை இயம்புகிறார். எனினும் அதே பாடலில், "பொன்றச் சகடம் உதைத்தாய் புகழ்போற்றி" முதலாகக் கண்ணன் அருட் செயல்களையே குறிக்கிறார் இம் மூன்று அவதாரங்களிலும், ஆண்டாள் மனம் மொய்ப்பது கண்ணன் அவதாரத்தில்தான் என்பதற்குப் பாவைப் பாடல்கள் பலவும் சான்றாய் அமைந்துள்ளன. ஆண்டாளின் "நாச்சியார் திருமொழியும்," வளர்ப்புத் தந்தையாகிய பெரியாழ்வார் திருமொழியும்கூட இக்கருத்திற்கு அரணாய் அமைகின்றன.

மூர்த்திபேதம் — இலிங்கோத்பவமூர்த்தி :

சைவநெறிப்படி சிவபிரான் பிறவா யாக்கைப் பெரியோனாதலின், சங்கற்ப மாத்திரையான் கொள்ளும் அளப்பிலா வடிவங்களே உண்டு. ஆகமங்கள், தோத்திரங்கள், சாத்திரங்கள், சிற்ப நூல்களில் சிவபிரானின் பேரருளையும். பேராற்றலையும் வியக்கும் மூர்த்தி பேதங்கள் 60-க்கும் மேல் சொல்லப்பட்டுள்ளன. அவற்றுள் முதற்கண் குறிப்பிடப் பெறுவது இறைவனின் பரத்துவம் குறிக்கும் இலிங்கோத்பவ மூர்த்தமாகும். மாணிக்கவாசகர். திருவெம்பாவையில், "ஏழை பங்காளன்'' "தன்னிற்பிரிவிலா எங்கோமான்'', ''மையார் தடங்கண், மடந்தை மணவாளா", "பேதை ஒருபால் திருமேனி'' என வரும் பகுதிகளில் உமாபாக மூர்த்தியைக் குறிப்பிடுகிறார். "தில்லைச் சிற்றம்பலத்துள் ஈசனார்'' "நற்றில்லைச்சிற்றம்பலத்தே தீயாடும் கூத்தன்'', "சிற்றம்பலம்". எனவரும் இடங்களில் நடராச மூர்த்தியைக் குறிக்கிறார். ஆயினும்,

"ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்சோதியை" (1)
'மாலறியா நான்முகனும் காணா மலையினை" (5)
"ஆதி திறம்பாடி அந்தமா மாபாடி" (14)
"அண்ணா மலையான் அடிக்கமலம் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகை வீறற்றாற்போல்" (18)
"போற்றி மால் நான்முகனும் காணாத புண்டரிகம்" (20)

எனப் பன்முறையும் இலிங்கோத்பவ மூர்த்தியைத்தான் ஈடுபட்டு ஏத்துகிறார். அடிகள் அருளிய பாக்களில் பெரும்பகுதி தில்லையம்பலவாணனைப் பற்றியதே. கோவை முழுவதும் தில்லைக் கூத்தனைப் பாட்டுடைத் தலைவனாய்க் கொண்டது. எனினும்,

திருவெம்பாவை திருவண்ணாமலையில் இருந்தபொழுது அருளிச் செய்தமையால் அத்தலத்து மூர்த்தத்தில் ஈடுபட்டுப் பாடினர் எனலாம். முத்தித் தலங்கள் நான்கு என்ப. திருவாரூரில் பிறத்தலும், தில்லையைக் காண்டலும், திருவண்ணாமலையை நினைத்தலும், காசியில் இறத்தலும் இறைவன் அடியை அடைவிக்கும் எனச் சைவர் நம்புவர். இந்நான்கு தலங்களில் ஆரூர் பிறத்தலும், காசியில் இறத்தலும் இயற்கையாகவே அமைய வேண்டும்: அன்றி, நம் விருப்பத்திற்கேற்ப அமைத்துக் கொள்ளுதல் இயலாது. ஆயினும் தில்லைக்கூத்தனைக் கண்டு தொழுதலும், திருவண்ணாமலை இறைவனை எண்ணி ஏத்துதலும் நம் முயற்சியால் எளிதில் எய்தற்கு உரியவையே. நினைந்து அருள்பெறும் திருவண்ணாமலையில் இறைவனைக் கண்டும், கண்டு அருள்பெறும் தில்லைக்கூத்தனைத் திருவண்ணாமலையில் இருந்து நினைந்து போற்றுதலும் திருவெம்பாவையில் காண்கிறோம். எனவே, காணுதல், நினைதல், என்பன புறத் தொழிலாக மாத்திரம் அமையாமல் அகத் தொழிலாகவும் அறிவுத் தொழிலாகவும் அமைதல் அவன் அருள் பெறுதற்கு அடிகோலும் என்பது தெளிவு. மேலும், பஞ்ச பூதத் தலங்களில் தேசோலிங்கமாய் வெளிப்பட்ட திருவண்ணாமலையினையும் ஆகாயலிங்கமாய் அமைந்திலங்கும் திருச்சிற்றம்பலத்தையும் திருவெம்பாவையில் புகழ்ந்துள்ளமை இன்புறத்தக்கது.

அப்பர் அடிகளும் இலிங்கபுராணத் திருக்குறுந்தொகை பாடினர். சிவஞானக்கன்றாகிய ஞானசம்பந்தப் பிள்ளையும் பதிகம் தொறும் ஒன்பதாம் பாடலில் இம்மூர்த்தியைப் போற்றினர். ஆண்டவன் அருவமாய் அன்றி அனற்பிழம்பாய் மலையிலக்காய் வெளிப்பட்டும் ஆணவப் பிணிப்புற்ற ஆன்மாக்களாகிய மால் அயன் அறிந்திலர். பதியை அறியப் பதிஞானம் தேவை. முடி என்பது சிவஞானத்தையும் அடி என்பது திருவருளையும் குறிப்பன. ஞானமும் அருளும் இறைவனின் வடிவமாய் இலங்குவன. உலகியலில் தலைகால் தெரியாமல் திரிதல் என்ற பழமொழியும் இலிங்கோத்பவ மூர்த்தியின் சிறப்பினைக் குறிப்பதாகக் கொள்ளலாம்.

முல்லைத்திணை — கண்ணன்: உலகளந்த உத்தமன் பரம்பொருளே எனினும் பாவைப் பாடல் நிகழ்ச்சிகளும் கருப்பொருளும் பெரும்பாலும் முல்லைத்திணைக்கு உரியவையாய் அமைந்துள்ளன. "சீர்மல்கு ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமியர்" பாவை வழிபாடு புரிகின்றனர். காகம் பிறப்பும் கலகலப்ப ஆய்ச்சியர் தயிர் கடையும் மத்தோசை வைகறைப்பொழுதை

அறிவிக்கும். பறவைகளும் கறவைகளும் விழித்து வெளிக் கிளம்பின. பாவைப் பாட்டின் மையமான கண்ணன் அவதாரமே ஆயர்பாடியில்தானே நிகழ்ந்தது. புலரிக்காட்சியை ஆண்டாள் சற்றுக் கூடுதலாகவே புனைந்து உள்ளார். ஆயின் மாணிக்கவாசகர், சுருக்கமாகக் குறிப்பிடுகிறார். முதற்கண் அஃறிணைப் பறவைகள் எழுந்து ஆரவாரம் செய்ய உயர்திணை மக்கள் வாத்திய ஒலியும் சங்கநாதமும் முழக்கினர் என்பர். (8) இக்கருத்து இளங்கோவடிகள் நெறியினைப் பின்பற்றி அமைந்ததே. (சிலம்பு. 14 : 1 — 5)

ஐந்திணைத் தெய்வம்: முல்லைத்திணைக்குரிய கண்ணனைப் போலாது ஐந்திணைக்கும் இறைவனாய் சிவபிரானை அடிகளார் அமைத்துப் போற்றுகிறார். இறைவன் அணியும் கொன்றை மாலை முல்லைத் திணைக்கு உரியது: 'சூழ்கொன்றைத் தார் பாடி" (14 ; 5) அரவங்கள் குறிஞ்சித்திணைக்குரியவை: "பின்னும் அரவத்தால்" (13 ; 2). "அண்ணாமலையான்" (18 1) என்ற குறிப்பும் காண்க. வெண்ணீறு பாலைத்திணையைக் குறிக்கும்; "ஆரழல்போல் செய்யா வெண்ணீருடி" (11 : 4). தாமரை மருதத்தினைச் சுட்டும்: "செங்கமலப் பொற்பாதம்" (17 : 5). "செங்கமலப் பைம்போதால்" (13 : 1), என்பன காண்க. மருதத்தில் பொழியும் மழைக் காட்சி இறைவனின் வாமபாகத்திற்கு உவமையாக்கப்பட்டதும் காண்க. (16). சங்குகள் நெய்தல் திணைக்கு உரியவை: "அங்கம் குருகினத்தால்" (13 : 2). இங்ஙனம் இறைவனின் திருமேனியாக விளங்குவது ஐந்திணையாக அமைந்த உலகமே என்றும் அதனை இயக்கும் உயிராக அவன் இலங்குகிறான் என்றும் கொள்ளுதல் வேண்டும். கல்லாடம் என்ற நூல் மணிவாசகரின் பாடல்களுக்கு எழுந்த விளக்கமாய் இலங்குவது. இப் பெருநூலில்,

"தாளியும் கொன்றையும் தழைத்தலின் முல்லையும்
பாந்தளும் தரக்கும் படைத்தலின் குறிஞ்சியும்
முடைத்தலை எரிபொடி உடைமையிற் பாலையும்
ஆமையும் சலமும் மேவலின் மருதமும்
கடுவும் சங்கும் ஒளிர்தலின் நெய்தலும்
ஆகத் தனது பேரருள் மேனியில்
திணையைந் தமைத்த இணையிலி நாயகன்"

எனச் சிவனருட் காட்சியைச் சித்திரித்தல் காண்க.

சத்தியை வியத்தல் : திருப்பள்ளியெழுச்சியினைத் தனியே அடிகளார் பாடியிருத்தலின் பாவைப் பாடலில் வழிபாட்டுக்குரிய பெண்களையும் கோயில் பிணைப்பிள்ளைகளையும் மட்டுமே எழுப்புகிறார். ஆயின் ஆண்டாள் நந்தகோபனின் கோயில் காப்போர், வாயில்காப்போர், நந்தகோபன். யசோதைப் பிராட்டி, பலதேவன் நப்பின்னை. கண்ணன். எனப் பலர்க்கும் பள்ளியெழுச்சி பாடுகிறார். பிராட்டியின் அருளின்றிப் பிரான அருள் பெறல் இயலாது என்பது இரு நெறியாளர்க்கும் ஒத்ததே. எனவேதான், "அன்றிவ்வுலகம் அளந்தாய் அடிபோற்றி" என ஆண்டாளும் "பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன் பாதத்திறம்பாடி" (14) "பொற்பாதம் ஏத்தி" (12) என மாணிக்கவாசகரும் பாடினர். மேலும். உயிர்களுக்குத் தோற்றம் காப்பு அழிப்பு, மறைப்பு, அருளல் என்ற ஐந்தொழிலையும் பரை. திரோதாயம் இச்சை. கிரியை, ஞானம் முதலிய சக்திகளால் இறைவன் நிகழ்த்தி அருளுதலைத் திருவெம்பாவையில் முடிபுப் பாடலில் அடிகளார் வியந்து போற்றியுள்ளார். மழையையும் பொய்கையினையும் காணுங்கால் அம்மை அருட்காட்சியே முந்துகிறது "அருளது சக்தியாகும் அரன்தனக்கு" என்ற சிவஞான சித்தியார் கருத்தும் இவண் எண்ணுதற்குரியது. திருவெம்பாவைக்கு அமைந்த தலைப்பு விளக்கமே "சத்தியை வியந்தது" என்பதே.

இரு பாவைகளிலும் வரும் சில தொடர்கள் கூட ஒத்துள்ளன. நேரிழையீர் என இருநெறிப் பாவையரும் விளித்தல் காண்க. (2:3; 1:2). படுக்கையினின்றும் எழும்பும் பாவை "எல்லாரும் வந்தாரோ." என்று வினவுதலும் "நீயே வந்து எண்ணிக்கொள்க" என்று குழுமியிருக்கும் கன்னியர் உரைத்தலும் திருவெம்பாவையில் காண்கிறோம். (4). "எல்லாரும் போந்தாரோ" என்று ஒருத்தி வினவ "போந்தார் போந்து எண்ணிக்கொள்" எனப் பாவையர் குழு விடையிறுத்தலும் திருப்பாவையில் காண்கிறோம், (15)

ஒருத்தி இறைவன் பெயர்களைக் கசிந்துருகி மொழிந்து பொருள்சேர் புகழைத் தித்திக்கப்பேசி யாவருக்கும் முதலாய் வந்து புலரியில் எழுப்புவதாய்ப் புகன்று இப்பொழுது தூங்குகிறாள். அவளைப் போன்றோரை எழுப்பும் பாவையர்,

"மானே நீ நென்னலை நாளைவந் துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ" (6)

"பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போது இப்போதா ரமளிக்கே
நேசமும் வைத்தனையோ" (2)

"முத்தன்ன வெண்ணகையாய் முன்வந்து எதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவதாய் வந்துன் கடைதிறவாய்" 3)

என இடித்துரைத்தல் திருவெம்பாவையில் காண்கிறோம். இக்கருத்துக்களைத் திருப்பாவையில்,

"' எங்களை முன்னம் எழுப்புவான் வாய்பேசும்
நங்காய்: எழுந்திராய் நாணுதாய்;
நாவுடையாய்"

என ஆண்டாள் அமைத்திருத்தல் காண்க.

பாவை வழிபாடு நிகழும் காலத்தினை "மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாள்" என்று பாவை முகப்பில் ஆண்டாளும்; "போற்றியாம் மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய்" என்று பாவை முடிவில் மாணிக்கவாசகரும் குறித்திருத்தல் நோக்கத் தக்கது. குள்ளக் குளிரக் குடைந்து நீராடலை ஆண்டாளும்; தடம் பொய்கைபுக்கு முகேரன்னக் கையாற் குடைந்து குடைந்து நீராடலை மாணிக்கவாசகரும் குறித்தனர்.

இனி, ஆண்டாள் பாவை வடிவம் அமைத்து அதற்குச் செய்யும் சடங்குகளையும்,

"நாமும்நம் பாவைக்குச் செய்யும் கிரிசைகள் கேளீரோ"
"நாங்கள்நம் பாவைக்குச் சாற்றி நீராடினால்"

எனச் சுட்டுகிறார். பாவை நோன்பிற்கு வேண்டும் விளக்கு. விதானம் கொடி, உக்கம், கண்ணாடி, பறை முதலிய உபகரணங்களையும் சாதனங்களையும்கூட ஆண்டவனிடமே வேண்டுதல் திருப்பாவையில் உண்டு. இக்குறிப்புக்கள் திருவெம்பாவையில் இல்லை மாணிக்கவாசகர் புறத்தொழில் அகத்தொழில் ஆகிய சரியை கிரியை நெறிகளைக் கடந்து அறிவுத் தொழில் ஒன்றனே நித்திய வியாபகச் சச்சிதானந்தப் பிழம்பாய் நிலவும் முழுமுதலை ஏத்தி சாயுச்சிய முத்தியைப் பெற்றவராதலின் கிரியைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துத் திருவெம்பாவையை அமைத்திலர். திருப்பாவையில் சிருங்காரச் சுவையும், திருவெம்பாவையில் பத்திச் சுவையும் விஞ்சியிருத்தல் வெளிப்படை.

நோன்பு முடிந்த பின்னரே திருப்பாவைப் பெண்கள் சூடகம், பாடகம், தோள்வளை, தோடு, செவிப்பூ, பல்கலன் அணிகின்றனர். புத்தாடை உடுத்துகின்றனர். பாற்சோறுமூட, நெய்பெய்து, முழங்கை வழிவாரக் கூடியிருந்து வயிறு குளிர உண்கின்றனர். உண்டி தவிர்தல், ஒப்பனை நீங்கல் முதலிய செய்திகள் திருப்பாவையில் குறித்திருத்தல் காண்கிறோம். ஆயின், இக்குறிப்புகள் திருவெம்பாவையில் இல்லை. எனினும், "காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக் கோதை குழலாட வண்டின் குழாமாட" சீதப்புனலாடிச் சிவபிரானை வணங்குகின்றனர்.

பாவைப் பெண்கள் அருளும் பொருளும் நிரம்பிய செல்வர்களே. "செல்வச் சிறுமீர்காள்" என்றார் ஆண்டாள். போதாரமளி என்று அவர் படுக்கையினையும், காதார் குழை, பைம்பூண்கலன் என அணிகலன்களையும் சுட்டி அவர்கள் செல்வப் பாவையர் என உணர்த்தினர் மாணிக்க வாசகர். எந்த இயக்கமும் செல்வரால் நிகழ்த்தப்பெறுங்கால் தனிச் சிறப்பு அடைதல் உறுதி என்பதை எண்ணி மகிழ்க.

திரிகரண சுத்தி :— பக்குவம் பெற்ற ஆன்மாக்களுக்குத் திரிகரணசுத்தியே சிறந்த இலக்கணம் என்பதும் இருபாவையிலும் காண்கிறோம், எண்ணம், மொழி, செயல், என்ற மூன்றும் முரணுமல் இறை அன்பிலே ஒன்றி நிற்றல்வேண்டும் சொல்லுக்கும் செயலுக்கும் அடிப்படை எண்ணம்தான். மனம், புத்தி, அகங்காரம், சித்தம் என்ற அகக் கரணங்கள் நான்கில் மனம் ஒன்றுவிட்டு ஒன்று பற்றும் குரங்கின் இயல்பினது. புத்தி பிரித்தறியும் தன்மைத்து, அகங்காரம் முனைப்பு நினைப்புடையது. சித்தம், இதனைச் செய்ய வேண்டும் என்ற வைராக்கியம் வாய்ந்தது இவற்றுள் முதல் மூன்றும் அடங்கிச் சித்தம் எப்பொழுதும் இறை நினைவில் தோய வேண்டும் வெள்ளாடை எந்த நிறத்தில் தோயுமோ அந்த நிறத்தைப் பெறுதல்போல, சித்தம் எந்த எண்ணத்தில் தோயுமோ அந்த வண்ணத்தையே அடையும். செம்மேனி எம்மானின். நினைவில் தோயும் பாவைப் பெண்களைச் "சித்தம் அழகியார்" (3:7) என்று மாணிக்க வாசகர் குறித்து அருளினர். இறைவனின் தெய்வீக அழகைப் படிந்த சித்தமும் அவ்வழகினைப் பெறுதல் திண்ணம் பசுகரணங்கள், பதிகரணங்கள் ஆகின்றன. "ஐந்து பேரறியும் கண்களே கொள்ள அளப்பரும் கரணங்கள் நான்கும் சிந்தையே யாக" நம்பி ஆரூரர் தில்லைக்கூத்தனை வணங்கியது நோக்கத்தக்கது. மாணிக்கவாசகரோ,

"சித்தம் சிவமாக்கிச் செய்வனே தவமாக்கும்
அத்தன் கருணையினால் தோணோக்கம் ஆடாமோ"
"அத்தன் அணிதில்லை அம்பலவன் அருட்கழல்கள்
சித்தம் புகுந்தவா தெள்ளேணம் கொட்டாமோ"

என்று தன்னனுபவத்தைப் பாடுதல் எண்ணுதற்குரியதே. "உள்ளம் கவர் கள்வன்" "மனத்தகத்தான் வாக்கினுள்ளான்", 'மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை" என மூவரும் உள்ளம் இறைவன் எண்ணத்தில் மொய்த்திருத்தலைச் சுட்டினர் நால்வர் நெறியில் நடந்த தாயுமான அடிகளும் "சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே தேசோமயானந்தமே" என்றார். "மனமது செம்மையானால் மந்திரம் செபிக்க வேண்டாம்" என்பது சித்தர் வாக்கு. "மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன்" எனத் தமிழ் மறை விளம்பும் பூசலை நாயனார், கட்டிய மனக்கோயிலில் முத்தி எழுந்தருளிய இறைவன் செயலும் எண்ணத்தகும்.

உள்ளம் தூய்மையுடையார் உரையும் தூய்மை பெற்றிருத்தல் உறுதி. உள்ளத்தில் உண்மை ஒளி உண்டானால், வாக்கினிலே ஒளி உண்டாகும் அன்றோ: சித்தம் அழகியார் பேசும் மொழிகளும் இறைவனைப் பற்றியே அமைதலின். தூய வாயர் என்பதை "அத்தன் அமுதன் ஆனந்தன் என்று அள்ளூறித் தித்திக்கப் பேசுவாய்" என்றும் "வண்ணக் கிளிமொழியார்" என்றும் "பாலூறு தேன்வாய்" என்றும் அடிகள் குறித்தார். படிறீ என விளித்தல் பாவைப் பெண்களைப் பரிகாசம் செய்யவேயன்றிப் பக்தியைக் குறைகூறுதற்கில்லை என்க

உள்ளமும் உரையும் இறைவனையே பற்றி நிற்றலின் அவர் தம்செயலும் அவ்வயப்படுதலை,

"எங்கை உனக்கன்றி எப்பணியுப் செய்யற்க"
கங்குல் பகல்எங்கண் மற்றொன்றும் காணற்க"

எனவும் வேண்டுதலான் விளங்கும் அடியார்க்கு ஆற்றும் வழிபாடு ஆண்டவனுக்கு ஆற்றுவதாய் அமைதலின்,

"உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே
பாங்காவோம்
அன்னவரே எம்கணவர் ஆவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்"
"எங்கொங்கை நின்அன்பர் அல்லார்தோள் சேரற்க"

என்று முறையிடுகின்றன. தொண்டு நெறியே இறைநெறி. "தெய்வம் அஞ்சல்" எனத் தொல்காப்பியர் சுட்டிய துறையும் பேராசிரியரின் உரையும் திருவெம்பாவையில் விளக்கம் பெறு

கின்றன. உள்ளம், உரை, செயல் மூன்றும் ஒழுங்குபெற்று அருள்நெறியில் நின்று அல்லல் அகற்றலே ஆண்டாளும்

"தாயைக் குடல்விளக்கம் செய்த தாமோதரனைத்
தூயோமாய் வந்து தூமலர் தூவித் தொழுது
வாயினாற் பாடி மனத்தினால் சிந்திக்க
போய பிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினிற் தூசாகும்"

என்று அழகுறப் பாடினார். இங்ஙனம் திரிகரண சுத்தி பெற்ற பக்குவ ஆன்மாக்களே சீவன் முத்தர்களாய் விளங்குகின்றவர்கள். இவர்கள் "எங்கெழில் என் ஞாயிறு எமக்கு" என்ற நிலையில் விளங்குபவர்.

எளிவருதல்: இறைவனின் அருட்குணங்களில் எளிவருதல் குறிப்பிடத்தக்கது. வைணவ நெறியில் இதனைச் சௌலப்யம் என்பர். பள்ளத்தை நோக்கிச் செல்லும் வெள்ளத்தைப்போல இறைவன் உயிர்களிடம் ஓடிவந்து அருளும் அற்புதத்தினைத் திருவெம்பாவையில் காண்கிறோம்:

"விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசும் மலர்ப்பாதம் தந்தருள வந்தருளும் நேசன்" (2)
"தானேவந்தெம்மைத் தலையளித்தாட்கொண்டருளும்" (6)
"இங்குநம் இல்லங்கள்தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் சேவகனை" (17)
"ஆர்ஒருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்" (15)

இவ்வரிகளில் இறைவனின் பெருங்கருணைப் பேராறு அன்பர் உள்ளங்களில் பாய்தலைப் பார்க்கிறோம். திருவாசகத்தில் பல இடங்களில் உண்மை அன்பும் விடாப்பிடியும், நம்பிக்கையும் நிறைந்த உயிர்க்கு இறைவன் அணுக்கனாய் எளிவந்து அருளிய திறனைப் பாரோர் வியக்க மணிவாசகர் பாடியுள்ளார். அஃறிணை உயிரினமாகிய பன்றிக் குட்டிகளுக்குத் தாயாகவந்து பாலூட்டிய அன்புச் சித்தர் அல்லரோ நம் சிவனார்! பிரான்சிஸ் தாம்ப்சன் என்ற ஆங்கிலக் கவிஞனும் இறைவனின் எளிவரு நிலையினை" The Hound of Heaven " என்ற ஆன்மீகப் பாடலில் அழகுறப் புனைந்துள்ளான்,

எனவே, இதுகாறும் எழுதியவாற்றால் ஆதிரைத் திருநாள் தொன்றுதொட்டு நின்று நிலவுவது என்பதும், பாவைப் பாடல்கள் பக்தி உணர்ச்சியை ஊட்டும் இயக்கப் பாடல்கள் என்பதும், இரு பாவைப் பனுவல்கட்கும் பொதுத்தன்மைகள் பல உள்ளன என்பதும், இவற்றை ஓதுவார்க்கு உள்ளம், உரை, செயல், தூய்மை பெறும் என்பதும் தெளிவு. ★

அலங்கடையும் இலங்கடையும்

டாக்டர் மோ. இசரயேல்
தமிழ்த் துறை, மதுரைப் பல்கலைக் கழகம்

பண்டைத் தமிழில் இன்றும் எளிதில் விளங்கிக் கொள்ள இயலாத சில அருகிய சொல் வழக்குகள் காணப்படுகின்றன. இலக்கியங்களில் அவற்றின் வழக்குகள் வாயிலாகவோ, அன்றேல் இலக்கண நூற்கள் வாயிலாகவோ அவற்றின் உண்மை நிலையை அறிந்து கொள்ளுதல் அரிதாகவே உள்ளது. இலக்கண நூற்களின் உரையாசிரியர்களும் கூட அவற்றை விளக்கிக் கூறுவதில் இடர்ப்படுகின்றனர்; அன்றேல் விளக்காது விட்டுவிடுகின்றனர். அத்தகைய சொல் வழக்குகளில் இவண் அலங்கடை, இலங்கடை ஆகிய இரண்டும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

அலங்கடை என்னும் சொல் தொல்காப்பியத்தில் பதினேழு இடங்களிலும், குறுந்தொகையில் ஓர் இடத்திலும் ஆளப் பட்டுள்ளது.[1] இலங்கடை குறுந்தொகையில் ஓர் இடத்திலும் காணப்படுகின்றது.[2] தொல்காப்பியனார் அலங்கடை என்ற சொல்லை ஒன்றலங்கடையே, இரண்டலங்கடையே, மூன்றலங் கடையே, எழுத்தலங்கடையே, பெயரலங்கடையே. அவையலங் கடையே, நாயலங்கடையே, மயிலலங்கடையே எனப் பெயர்ச் சொற்களை ஒட்டி நூற்பாக்களின் இறுதியில் ஆண்டுள்ளார். சங்கப்புலவரும் இலங்கடை என்ற சொல்லை 'அன்பிலங்கடையே' என்பது போன்ற தொடர்களில் பெயர்ச்சொல்லை ஒட்டி செய்யுட் களின் ஈற்றிலேயே ஆண்டுள்ளனர். எனவே, இலக்கண நூற் பாக்களிலாயினுஞ் சரி அல்லது சங்கப் பாடல்களிலாயினும் சரி இறுதியில் பெயர்ச் சொற்களை ஒட்டி இச்சொற்கள் ஆளப் படுதலே இயல்பாகக் காணப்படுகின்றது. மேலும் எல்லா இடங் களிலும் இச்சொற்கள் ஏகாரத்துடனேயே முடிதல் அறியத் தக்கது. இந்த ஏகாரம் ஈற்றசை ஏகாரமாகும் எனலாம்.

அலங்கடை என்னும் சொல் 'அல்லாத விடத்து' என்னும் பொருளிலும் இலங்கடை என்னும் சொல் 'இல்லாத விடத்து' என்றும் பண்டை மொழியில் ஆளப்பட்டுள்ளன.

தனிச் சொல்லா? அன்று?

இவை வழக்கில் தனிச்சொல் போலவே அமைகின்றன. எனினும் அலங்கடை அலம்+கடை எனவும் இலங்கடை இலம்+

கடை எனவும் பிரித்துக்கொள்ள இடந்தருகின்றன. பின்வரும் சொல் வழக்குகளோடு இவற்றை ஒப்பிட்டுப்பார்ப்போம்.

அலந்தலை நெமை (அகம் 111) அலம்—தலை
அலந்தலை வேலம் (பதி 39 : 12) அலம்—தலை
அலந்தலை உன்னம் (பதி 23 : 1) அலம்—தலை
அலந்தலைமை (திவ்ய பெரிய திரு 4, 4. 3) அலம்—தலைமை
அலங்கோலம் (இரா. அயோ. 7) அலம்—கோலம்
இலம்பாடு (தொ. சொ. 360) இலம்—பாடு

இங்குக் கொடுக்கப்பட்ட சொல் வழக்குகளிலெல்லாம் 'அலம்' அல் என்னும் அடியினை உடையதாய் அன்மைப் பொருளிலும் 'இலம்' இல் என்னும் அடியினைப்பெற்று இன்மைப் பொருளிலும் அமைகின்றமையைக் காணலாம். அல் என்பது உள்ள நிலையின் தன்மையை மறுக்கும் எதிர்மறை அடி. இல் என்பது. உண்மையை மறுக்கும் எதிர்மறை அடி.

இன்னும் சில வழக்குகளையும் ஒப்பிடுவோம்,

சுட்டுங்காலை (தொ சொ, 24)
நிலையுங்காலை (தொ. சொ. 54)
அல்லாக்காலை (தொ. பொ. 449)
வகுத்தக்கால் (கலி. 35)
வந்தக்கடை (கலி. 22)

தொடர்ந்து சில சொல் வழக்குகளைப் பார்ப்போம்.

அல்லாக்கால் (கலி. 124)	இல்லாக்கால் (கலி 124)
அல்பொருள்	இல்பொருள்
அல்வழி	இல்வழி
அல்லாச்சார்பு	இல்லாப்பொருள்

பின்வரும் இணையான வழக்குகள் ஒரே பொருள் உடையன என்பது தெளிவு.

இல் பொருள்	இல்லாப் பொருள்
அன் மொழி	அல்லா மொழி
அல்வழி	அல்லா வழி

மேற்கொடுக்கப்பட்டுள்ள எல்லாச் சொல் வழக்குகளையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது பல உண்மைகள் புலப்படும். அல்,

அல்லா என்பன ஒரே பொருளுடையன. இல், இல்லா என்பன ஒரே பொருளுடையன. எனவே அல்லா, இல்லா என்னும் எதிர்மறைப் பெயரெச்சங்களில் விகுதி ஆகாரம் பொருளற்ற தாகவே அமைகின்றது. அல் இல் என்னும் எதிர்மறை அடிகள் பிற பெயரெச்சங்களின் ஒப்புமையாக்கத்தால் (analogy) அல்லா, இல்லா என வழங்கத் தலைப்பட்டன.

வேறுபடாப் பொருள், திரியா வேற்றுமை, சுட்டா மகன் என்னும் பெயரெச்சத் தொடர்களில் 'ஆ' எதிர்மறை விகுதியாக அமைய அல்லாச் சார்பு, இல்லாப் பொருள் என்பவற்றில் 'ஆ' பொருளற்றதாகவே அமைகின்றது.

அலங்கடை, இலங்கடை ஆகியவற்றை இல்லாக்காலை அல்லாக்காலை, வந்தக்கடை, நினையுங்காலை முதலியவற்றோடு ஒப்பிட்டால் 'அம்' என்னும் பொருளற்ற வடிவம் அல், இல் என்னும் அடிகளோடு இணைந்து நின்று அல்லா, இல்லா என்பவற்றில் உள்ள ஆகாரத்திற்கு இணையாக அமைந்துள்ளது என்பது தெளிவாகும்.

எனவே அல், இல், அல்லா, இல்லா, அலம், இலம் என்னும் வடிவங்கள் பெயரெச்சங்களாகச் செயலாற்றுவன அவை தழுவி நிற்கும். கடை, கால் போன்றவை பெயர்ச் சொற்களாகச் கொள்ளத்தக்கவை. ஆயின், அலங்கடை, இலங்கடை என்பன அமைப்பில் பெயரெச்சத் தொடர்கள் எனக் கொள்ளுந் தன்மையன எனலாம்.

தொல்காப்பியர் இலக்கணச் செய்தி

தொல்காப்பியனுர் வினையியலில் ஒன்பது வகையான வினையெச்ச வாய்பாடுகளைக் கூறி, அவற்றைச் சுருக்க

> பின்முன் கால்கடை வழியிடத் தென்னும்
> அன்ன மரபிற் காலங் கண்ணிய
> என்ன கிளவியும் அவற்றியல் பினவே
>
> (தொ. சொ. 229)

என்று கூறுகின்றார். "பின், முன், கால், கடை, வழி, இடம் என்று சொல்லப்பட்டனவும் அந்த மரபிற் காலங் குறித்து வரும் எல்லாச் சொல்லும் வினையெச்ச இயல்பின" என்பது இதன் பொருள்.[3] இந்நூற்பாவின் கண் வினையெச்ச ஈறுகளே தொகுக்கப்பட்டுள்ளன என்பர் இலக்கண அறிஞர். இவை

வினையெச்ச ஈறுகளாக வருதற்கு உரையாசிரியர்கள் இறந்த பின்னே (கலி. 15) வருமுன்னர் (குறள் 4351) நாடுங்கால் (கலி. 16), வந்தக்கால் (கலி 35), வந்தக்கடை (கலி 32), விடுவழிச் சென்ருங்கு (கலி, 130), காழ்த்த விடத்து (குறள் 879) போன்ற எடுத்துக் காட்டுக்களைத் தருகின்றனர். இவ்வினையெச்ச ஈறுகளுள் 'கடை' என்பதும் ஒன்ருகக் கொள்ளப்படுதல் கவனித்தற்பாற்று தரப்பட்ட எடுத்துக்காட்டுகளில் வினை யெச்சங்களின் அமைப்பை ஆயுங்கால் அவை யாவும் உள் அமைப்பில் பெயரெச்சத் தொடர்களாகவே காணப்படுகின்றன தொல்காப்பியனுர் தரும் வினையெச்ச ஈறுகளைத் தழுவி நிற்கின்ற எல்லாச் சொற்களையும் பெயரெச்சங்களாகக் கொள்ளுதல் பொருந்தும். அவை பெயர் எச்சங்களாகக் கொள்ளப்படின் அவற்ருல் தழுவப்படும் பின் முன், கால், கடை போன்ற சொற் கள் பெயர்ச் சொற்களேயாகும்.

வினையெச்ச ஈறுகளாகத் தொல்காப்பியனுர் தருபவை அனைத்தும் காலங்கண்ணிய கிளவிகள் என்று அவரே குறிப் பிட்டுள்ளார். எனவே அவற்றைக் காலப் பெயர்கள் எனக் கருத லாம். வேற்றுமை உருபுகளை முழு அளவில் ஏற்று வழங்கும் இயல்புடையதாயிருத்தல் போன்ற பெயர்ச் சொற்களின் இயல் புகள் முழுமையாக அவற்றில் காணப்படாவிடினும் பயன் வகையில் அவை பெயர்களாகவே அமைகின்றன என்பதில் ஐயமில்லை.

எ—டு

சென்றக்கால்	பெற்ற கல்வி
வந்தக்கடை	வந்த கலி
	வந்த பொழுது

சென்றக்கால் வந்தக்கடை சொற்றொடர் அமைப்பில் பெய ரெச்சத்தால் தழுவப்பட்ட பெயர் அமைந்தவை என்று கொள் வதற்கு ஓர் இடர்ப்பாடு காணப்படுகிறது. பெயரெச்சத்தின் முன் வல்லினம் வர மிகுவதில்லை 4. ஆனுல் சென்றக்கால், வந்தக்கடை ஆகியவற்றில் வலி மிகுந்து காணப்படுகின்றது. எனவே, தொடக்க நிலையில் இருவேறு தனிச் சொற்களாக அமைந்து பெபரெச்சத் தொடர்களாக வழங்கினவை தொல் காப்பியனுர் காலத்திற்கு முன்னரே இணைந்து ஒரு சொல்லாக அமைப்பிலும் பயன் வகையிலும் வழங்கத்தலைப்பட்டிருக்கலாம் என்று கொள்ளுதல் பொருந்தும். வினையெச்ச ஈறுகளாகக் கூறப்பட்டவை காலப்பொருள் குறிக்கின்றமையாலும் முழு அள

வில் வேற்றுமை உருபை ஏற்றுச் செயலாற்றுமையாலும் இலக்கண நூலார் அவற்றைப் பெயர்களாகக் கொள்ளவில்லை என்று கருதுவதில் தவறில்லை

அமைப்பில் 'அவற்றைப் பெயரெச்சத் தொடர்களாகக் கொண்டாலும், பயன் வகையில் அவை வினையெச்சங்களே. எனவேதான் வருமொழிகள் வினையெச்ச ஈறுகளாகத் தொல்காப்பியனாரால் கருதப்பட்டன.

எனவே, அலங்கடை. இலங்கடை என்பவை பயன் வகையில் வந்தக்கடை, சென்றக்கால் போன்ற வினையெச்சங்களே அல். இல் என்பன குறிப்புப் பெயரெச்ச அடிகள். அல்லது குறை வினையடிகள். வினையெச்ச ஈறுகளில் ஒன்றாகத் தொல்காப்பியனார் கொள்ளும் 'கடை' என்பதும் பெயர்ச்சொல்லே ஆகும். 'அம்' என்னும் பொருளற்ற வடிவம் ஒலிநயத்தின் பொருட்டு இடையில் அமைந்து, அலங்கடை இலங்கடை என்னும் பெயரெச்சத் தொடர்கள் அமைந்துள்ளன எனலாம்

தொ. எ. 1 எழுத்தெனப் படுப
அகர முதல் னகர இறுவாய்
முப்பஃ தென்ப
சார்ந்துவரல் மரபின் மூன்றலங் கடையே

தொ. எ. 30 மெய்ந்நிலை சுட்டின் எல்லா வெழுத்தும்
தம்முன் தாம்வரூஉம் ரழ அலங்கடையே

தொ. எ. 62 சகரக் கிளவியும் அவற்றோ ரற்றே
அஇஔ எனும் மூன்றலங் கடையே

தொ. எ. 72 ஒவ்வும் அற்றே நவ்வலங் கடையே

தொ. எ. 423 ஒன்றுமுத லாக எட்ட னிறுதி
எல்லா எண்ணும் பத்தன் முன்வரின்
குற்றிய லுகரம் மெய்யோடும் கெடுமே
முற்றஇன் வரூஉம் இரண்டலங் கடையே

தொ. சொ. 61 கண்ணுந் தோளும் முலையும் பிறவும்
பன்மை சுட்டிய சினைநிலைக் கிளவி
பன்மை கூறுங் கடப்பா டிலவே
தம் வினைக்கு இயலும் எழுத்தலங் கடையே

தொ. சொ. 70 பெயர்நிலைக் கிளவி காலந் தோன்றா
தொழில்நிலை யொட்டும் ஒன்றலங் கடையே

தொ. சொ. 197 திணையொடு பழகிய பெயரலங் கடையே

தொ. சொ. 178 தற்புகழ் கிளவி கிழவன்முற் கிளத்தல்
எத்திறத் தானும் கிழத்திக் கில்லை
முற்பட வகுத்த இரண்டலங் கடையே

தொ. பொ. 197 பால்கெழு கிளவி நால்வர்க்கும் உரித்தே
நட்பின் நடக்கை யாங்கலங்கடையே

தொ. பொ. 231 தம்முறு விழுமம் பரத்தையர் கூறினும்
மெய்ம்மை யாக அவர்வயி னுணர்ந்தும்
தலைத்தாம் கழறல்தம் எதிர்ப்பொழு தின்றே
மலிதலும் ஊடலும் அவையலங் கடையே

தொ. பொ. 256 ....
....
அவையும் உளவே அவையலங் கடையே

தொ. பொ. 265 அவையும் உளவே அவையலங் கடையே

தொ. பொ. 309 அடுக்கிய தோற்றம் விடுத்தல் பண்பே
நிரனிறுத் தமைத்தல் நிரனிறை சுண்ணம்
வரன்முறை வந்த மூன்றலங் கடையே

தொ. பொ. 346 பத்தெழுத் தென்ப நேரடிக் களவே
ஒத்த நாலெழுத் தேற்றலங் கடையே

தொ. பொ. 555 பிள்ளைப் பெயரும் பிழைப்பாண் டில்லை
கொள்ளுங் காலை நாயலங் கடையே

தொ. பொ. 593 சேவல் பெயர்க்கொடை சிறகொடு சிவணும்
மாயிருந் தூவி மயிலலங் கடையே

குறுந்தொகை 339.6,7 குவளை யுண்கண் கலுழ
பசலை யாகா வூங்கலங் கடையே

குறுந்தொகை 93, 3, 4 அன்னையும் அத்தனும் அல்லரோ தோழி
புலவியஃ தெவனோ அன்பிலங் கடையே

நற்றிணை 174. 10, 11 மல்லல் மார்பு மருத்தனன்
புல்லுமற் றெவனோ அன்பிலங் கடையே

3. தெய்வச்சிலையார். தொல்காப்பியச் சொல்லதிகார உரை 223

4. தொ. எ. 210.

இலக்கியத்தில் கொள்கை முழக்கம்

புலவர் தி. நா. அறிவு ஒளி

அழகான தமிழ் நடை, அரிய பொருட் சிறப்பு, இயற்கை யெழிலின் இனிய விளக்கம், ஓவியச் சொல்லாட்சி, சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் யாப்பாற்றல், கதை வழியாகவும், நேர்முகமாகவும் கொள்கை முழக்கமிடும் அறிவாற்றலின் சுவை, அன்றும் இன்றும் புதுமை காட்டும் புரட்சியான கதை மாந்தரின் இயல்புகள் என்றிவற்றைக் கொண்ட தொடர்நிலைச் செய்யுளே சாத்தனர் அருளிய மணிமேகலையாம்!

இந்நூலின் தலைவி மணிமேகலை ஓர் எளிய விலைமகள் குடியில் பிறந்தவள். உலகம் இகழ்வாகக் கருதும் மரபினள் ஆயினும், அவளைப் பாட்டுடைத் தலைவியாக அமைத்தமை சாத்தனரின் 'முற்போக்கான இலக்கியப் புரட்சி' யாகும். இவளுக்கு இணையாகக் கதைத் தலைவனை ஆசிரியர் உருவாக்கவில்லை. உதயகுமரன் ஒருவகைத் துணைக் கதையுறுப்பினனாகவே படைக்கப் பெற்றுள்ளான். பலரும் போற்றும் ஆடவனாக நூலில் அமைபவன் ஆமகன் (ஆபுத்திரன்) ஒருவனே இவனும் கதைத் தலைவனல்லன்! எனவே தன்னேரில்லாத் தலைவியாக மணிமேகலை மிளிர்கிருள்!

மணிமேகலையில் 'தீயோர்' என்று தனித்த முறையில் எவ்வுறுப்பினரும் ஆசிரியரால் குறிக்கப்படாதது ஓர் அரிய புதுமை மரபாகும். இவ்வகையில் சிலப்பதிகாரத்தைக் காட்டிலும் நயமுந் திறமும் சான்றதாக மணிமேகலை சீர்மையடைகிறது. சோழ அரசி 'சீர்த்தி' ஒருவகையில் தீயவளாகக் காட்டப்பட்டிருப்பினும், அவள் முதலிலும் முடிவிலும் நல்லவளாகவே இருக்கிருள். வாழ்வில் நாம் காணும் மகளிர் போலவே சூழ்நிலை — வாழ்நிலைகளால் தாக்கப்பட்டு ஓரளவு தீமை செய்பவளே தவிர, கதை மரபு வழிப்பட்ட கொடுமையளாக ஆசிரியர் படைத்திலர். மணிமேகலைக்குச் சில தீங்குகளைச் சீர்த்தி இழைத்தாளாயினும், மணிமேகலையின் நல்லியல்பை உணர்த்தும் சீர்த்தி மனம் வருந்தித் திருந்துகிருள்; மணிமேகலையை மனமாரப் போற்றுகிருள்; அவளைக் காக்கவும் முனைகிருள். இதனுல் இயற்கையில் சீர்த்தி தீயவள் அல்லள் என அறியலாம், அவள் மகன் உதயகுமரன் கொலையுண்ண ஒருவகையில் மணிமேகலை அடிப்படையாக இருந்தாள் என்ற ஆற்ருமையாலும் அவலத்தாலுமே

அவள் உள்ளம் திரிந்தது அறிவு வழிப்படாமல் துன்பத்திற்கு இரையாகி உணர்ச்சி வெறிக்கு அடிமையானல் தீயநெறியில் மக்கள் விருப்பத்தோடு ஈடுபடுவர் என்ற வாழ்வறிவினைச் சீர்த்தியின் பண்போவியப் படைப்பால் சாத்தனர் உணர்த்துகிறார்.

மன்பதையால் தாழ்த்தப்பட்டுப் பழிக்கப்பெற்ற இரக்கத்திற்குரிய இளமகளை நூல் தலைவியாகக் கொண்ட குடிமகட் பாவியம் மணிமேகலையே. அவளுக்கு அடுத்த நிலையில் மிகுதியான இடம் பெறும் ஆமகனும் மன்பதையால் இகழப்பெற்ற ஒழுக்கக் கேட்டாற் பிறந்தவனே. (கலப்புத் திருமண — (திருமணம் செய்யாமலேதான்!) — வாயிலாகப் பிறந்த ஏதிலனை (அனாதை) அன்றே மிக முற்போக்கான நெஞ்சோடு படம் பிடித்த சாத்தனரின் நடைமுறை இயல்பு நவிற்சி இலக்கியப் படைப்பாற்றலை எவ்வளவு பாராட்டினாலும் தகும் அல்லவா!

ஆமகன் ஒரு சீர்திருத்தச் செம்மல்; ஆரியக் கொள்கையின் எதிரி; ஏழை பங்காளன்; பொதுவுடைமைச் செயலாளன்; இல்லோர்க்கீயும் நல்லோன்; வேள்வி மறுத்த மேலோன்; உலகியலின் தவருன போக்குகளைக் கடிந்த மறவன்; அதனல் பலரின் இகழ்ச்சிக்கும் தாக்குதலுக்கும் புறக்கணிப்புக்கும் ஆளாகி இரந்துண்ணும் இழிநிலையடைந்தோன். இரவலனாகமட்டுமா அவன் வாழ்ந்தான்? புரவலனுமாவான். ஆம். ஊரில்தான் இரந்து பெற்ற உணவில் ஒரு பகுதியை ஏனை இரவலர்க்கு வழங்கி, எஞ்சியதை உண்டுவாழ்ந்த ஒப்புரவாளன் ஆமகன்! பகுத்தறிவாளனும், ஒப்புரவாளனும், இரக்கமிகு நெஞ்சினனும், உணவுக் கொடையாளனும் அறவோனுமாக ஆமகனைச் சாத்தனர் உருவாக்கிய திறம் செம்மை சான்றதாம்.

எல்லா மக்கள் பாலும் நனிபேரன்பும் பேரருளும் உடையவர் மணிமேகலை ஆசிரியர். இதனை அவர் கூற்றாலும், கதையமைப்பினாலும் நாம் அறிகிறோம். சமயப்பற்று மிகுதியுடைமையினல் சிலரை அவர் இகழ்ந்திருப்பது உண்மையே ஆயின், அங்கும் மக்கட் பரிவுணர்வுடையவராகவே சாத்தனர் காட்சியளிக்கிறார்.

'மக்கட் பண்பு' உலகில் நிலைபெறவேண்டுமானல் தீமை செல்வாக்குப் பெறுதல் கூடாது. "திருந்தாச் செய்கைத் தீத்தொழில், உலகில் நிகழ்தல் கூடாது" என்பது சாத்தனர் கொள்கை. இதனல் தான் மாதவி, மணிமேகலையை குடி வழக்கமான ஆடல் — பாடல் — பரத்தமையில் ஈடுபடுத்தாமல் புத்தத் துறவியாக ஆக்கியதாக அமைத்தார்.

'இழிதொழில் புரிந்தோரும் மனத்திட்பத்தோடு முயன்றால் உயர்நெறி யொழுகுதல் எளிது' என்பதையே மணிமேகலை வாயிலாகச் சாத்தனர் உலகிற்கு முழங்குகிறார். மனத்தை மேனிலைக் குயர்த்துதல் (Sublimation) இளம்பரத்தை மகளுக் கும் ஒல்லுமாயின் ஏனையோர்க்கு ஏன் ஆகாது? என அறை கூவுகிற இலக்கியம் மணிமேகலை!

'உலக மக்கள் தவறான கொள்கைகளை நிலையான உண்மை களாகக் கருதி யொழுகுகின்றனர். அறிஞர் தவற்றைச் சுட்டிக் காட்டி இருள் மாயைகளை ஓட்டி, அறிவொளி பரப்புதல் வேண் டும்' என்பது சாத்தனின் சால்புக் கொள்கையாகும். இதைச் சாதுவன் வரலாற்றில் உணர்த்துகிறார்.

ஆதிரை என்னும் கற்புக்கரசியின் கணவனான வணிகன் சாதுவன், கலம் கடலில் கவிழ்ந்த பின் ஒரு தீவினையடைகிறான். அங்கு வாழும் நாகர் இனத்தினர் மக்களைக் கொன்று தின்று வாழ்பவர்; கள்ளும் காமமும் ஊனுணவும் மிக விழைபவர் அறநெறியோ, அருள் நெறியோ அணுவளவும் அறியாதவர்.

சாதுவனுக்கு நாகர் பேசும் மொழி தெரியும். நாகரிடமும் அன்னார் குருமகனிடமும் நாகரின் தாய்மொழியிற் சாதுவன் பேசினான்: அறவுரை வழங்கினான்; கொடியவரை இனியரா யாக்கிச் சீர்திருத்தினான்.

"பெண்டிரும் உண்டியும் இன்றெனின் மாக்கட்கு
உண்டோ ஞாலத்து உறுபயன்? உண்டெனில்
காண்குவம் யாங்களும் காட்டுவா யாக..." என

நாகர்குரு அறைகூவிக் கேட்டான். இக்காலத்தினர் பலரும், 'உண்டியும் பெண்ணுடம்புச் சிற்றின்ப வேட்டையுமே வாழ் வின் குறிக்கோளும் முடிபும்' என நம்பி வாழ்கின்றனர் அல் லரோ? அது போன்றே அவன் கேட்டான்.

சாதுவன். "நல்லவழி செல்க உனக்கு இயலக்கூடிய வழி யில் அறம் சொல்வேன். கேட்க. கப்பல் உடைந்து நும் தீவுக் குக் கடற்கரையில் ஒதுங்கும் 'உயிர் பிழைத்தவர்,' இங்கு வந் தால்; அவர்களைக் கொன்று தின்னும் கொடுமையை விட்டொழி யுங்கள்! அவர்களை வரவேற்று அன்பு காட்டிக் காத்து உதவுங் கள்! எந்த உயிரிடத்தும் கொலை செய்தலைத் தவிர்த்துவிடுங்கள்! கொல்லாமையே உயர்ந்த நல்லறம்!" என அறிவுரை வழங்கித் திருத்தினான்.

"உன் தனக்கு ஒல்லும் நெறியறம் உரைக்கேன்
உடைகல மாக்கள் உயிர்உய்ந்து ஈங்கு உறின்
அடுதொழில் ஒழிந்து அவர் ஆருயிர் ஓம்பி
முத்து விளி மா ஒழித்து எவ்வுயிர் மாட்டும்
தீத்திறம் ஒழிக!......"

[மேகலை: 16-ஆதிரை பிச்சையிட்ட காதை: 113-117]

பெண்ணுடம்பைப் பேரின்பக் கருவியாய், ஆவல் கொள் கலமாய்க் கருதி மகள் வேட்டையாடும் மனமடங்காக காளையர்க்குப் பருவப் பெண்ணுடல் மூத்துக் கிழமானால் எவ்வளவு இழிந்ததாக ஆகும் என்பதை மணிமேகலை உதய குமரனுக்கு உணர்த்துகிறாள். அவனுக்கு உரைக்குமுகத்தான் சாத்தனார் உலக இளைஞர்க்கு உரைக்கிறார்!

'உலக அறவி' என்ற இடத்திலிருந்து (காவிரிப்பூம்பட்டினத்திலிருக்குமிடம்) மணிமேகலை உணவளிக்கும் அறம்செய்து கொண்டிருக்கிறாள். அங்கே காதல் மிகுந்த காளை உதயகுமரன் மணிமேகலையைக் கண்டு அவள்பால் 'முதுக்குறை முதுமொழி கேட்குவன்' என்று கருதிச் செல்கிறான். அவனுடைய பொருந்தா ஆவலைத் திருந்தாச் செய்கையைத் திருத்த மணிமேகலை எண்ணுகிறாள் அங்கே காட்சிதரும் நரைமூதாட்டி ஒருத்தியைக் காட்டி மணிமேகலை கூறுகிறாள்;

"தண் அறல் வண்ணம் திரிந்து வேறாகி
வெண்மணல் ஆகிய கூந்தல் காணாய்!
பிறை நுதல் வண்ணம் காணா யோ நீ
நரைமையில் திரைதோல் தகையின்று ஆயது
விறல்வில் புருவம் இவையும் காணாய்
இறவின் உணங்கல் போன்று வேறு ஆயின
கழுநீர்க் கண்காண் வழுநீர் சுமந்தன
குமிழ்மூக்கு இவைகாண் உமிழ்சீ ஒழுக்குவ
நிரைமுத்து அனைய நகையும் காணாய்
சுரை வித்து ஏய்ப்பப் பிறழ்ந்து வேறு ஆயின
இலவுஇதழ்ச் செவ்வாய் காணா யோ நீ
புலவுப்புண் போல் புலால் புறத்துஇடுவது
வள்ளைத் தாள்போல் வடிகாது இவைகாண்
உள்ஊன் வாடிய உணங்கல் போன்றன
இறும்பூது சான்ற முலையும் காணாய்
வெறும்பை போல வீழ்ந்து வேறுஆயின
தாழ்ந்துஒசி தெங்கின் மடல்போல் திரங்கி
வீழ்ந்தன இளவேய்த் தோளும் காணாய்

நரம்பொடு விடுதோல் உகிர்த்தொடர் கழன்று
திரங்கிய விரல்கள் இவையும் காணாய்
வாழைத் தண்டே போன்ற குறங்குஇணை
தாழைத் தண்டின் உணங்கல் காணாய்
ஆவக் கணைக்கால் காணா யோநீ
மேவிய நரம்பொடு என்புபுறம் காட்டுவ
தளிர்அடி வண்ணம் காணா யோநீ
முளிமுதிர் தெங்கின் உதிர்காய் உணங்கல்
பூவினும் சாந்தினும் புலால்மறைத்து யாத்துத்
தூசினும் மணியினும் தொல்லோர் வகுத்த
வஞ்சம் தெரியாய் மன்னவன் மகன்"

[மேகலை. 20 உதயகுமரனை வாளால் எறிந்த காதை; 41-69]

இவ்வாறு நில்லா இளமை யாக்கையின் இயல்பினைச் சுட்டிக் காட்டி ஒழுக்கத்தை வற்புறுத்துகிறார். இத்தகு பாடற் பகுதி பிற்காலத்தில் பெண்ணை மட்டும் பழித் தொதுக்கும் தீயநெறி யாக வளர்ந்தது. சாத்தனார் புத்தநெறி வழி நின்று உடலின் இழிவை ஓதினார் என்பதை உணர வேண்டும்.

சாத்தனார் பெண்டிரைக் குறித்து உயர்ந்த எண்ணமுடை யவர் ஆவார். தம் நூல் தலைவியை அவர் தேர்ந்ததினின்றே இதனை நாம் அறியலாம்.

"உலகில் கற்புத் திண்மையால் மழையாகிய வளத்தைப் பொழியச் செய்யும் ஆற்றலுடைய மகளிர். பிறர் (ஆடவர்) நெஞ்சுட் புகமாட்டார். பிறர் எண்ணிப் பார்க்கும் வண்ணம் கற்புள்ள மகளிர் வாழார்" என அரிய கருத்துரைக்கிறார் ஆசிரியர்;

"மண்திணி ஞாலத்து மழைவளந் தரூஉம்
பெண்டிர் ஆயின். பிறர் நெஞ்சு புகாஅர்"
[மேகலை: 22 சிறைசெய் காதை: 45—46]

தமது பொலிவார் உடம்பை ஊராரும் உலகோரும் முழுமை யாகவோ, அரைகுறையாகவோ காணும் வண்ணம் மதர்ப்போடு காட்டிக் காண்போர் நெஞ்சுக்குக் காமவெறிக் கனலூட்டித் திரி யும் 'கற்பரசிகள்' இக்காலத்தில் 'பொதுவுடைமை மனப் பான்மை' யோடு பொங்கித் துளும்புவதைக் காண்கிறோமன்றோ? அப்பெருமாட்டிகளுக்குச் சாத்தனாரின் பொன்னார் புலமைப் பொன்றாக் கருத்தை — அறம் வாழ் திருநெஞ்சில் பூத்த ஒரு பெரும் பொருளுரையைக் — காணிக்கையாக்குவோம்!

கற்புடை மகளிர் தம் திறம் யாதெனச் சாத்தனர் அவர் கால வழக்கை யொட்டி வரலாற்றுமுறை விளக்கம் நல்குகிருர்.

"கற்பு மகளிர்க்கு உயிரினுஞ் சிறந்தவர் கணவர் ஆவார் அவர் இறத்தால், மனைவியர் மனத்தில் துன்பத்தீ மூளும். உலையில் ஊதும் துருத்தியின் மூக்கைப் போல வெப்பத்தால் மகளிர் பெருமூச்சு விடுவர். துன்பம் அவர் தம் மனத்திற்குள் அடங்காமல் மிக. தமது இனிய உயிரைக் கணவருடன் தாமும் துறப்பர்"

"அவ்வாறு உடனுயிர் துறவாத நிலை சிலர்க்கு அமையும். தானே செல்லாத உயிரைத் தாமே துறக்கக் கற்புடை மகளிர் முனைவர். அப்பெண்கள், நல்ல குளிர்ச்சியான நீருள்ள குளத்தில் நீராடுபவரைப் போல. மிகுந்த நெருப்பில் புகுவர்"

"அவ்வாறு தீக்குளித்து ஒழியாத மகளிர், மறுமையில் தம் கணவரோடு ஒருங்கு வாழும் வாழ்க்கையை விரும்பிக் கைம்மை நோன்பு மேற்கொண்டு உயிர் சுமந்த உடம்பை வருத்துவர்."—மாதவி வாய்மொழி வழியாகக் கற்பரசிகளின் மூவகை நிலையை மணிமேகலைப் புலவர் கூறுகிருர்:

"காதலர் இறப்பின் கனையெரி பொத்தி
ஊதுஉலைக் குருகின் உயிர்த்து அகத்து அடங்காது
இன்னுயிர் ஈவர்; ஈயார் ஆயின்,
நன்னீர்ப் பொய்கையின் நளிஎரி புகுவர்
நளியெரி புகாஅ ராயின் அன்ப ரோடு
உடனுறை வாழ்க்கைக்கு நோற்று உடன்படுவர்
பத்தினிப் பெண்டிர் பரப்புநீர் ஞாலத்து."
[மேகலை: 2 ஊர் அலர் உரைத்தகாதை: 42—48] (தொடரும்)

மதிப்புரை

குமரகுருபரன்: திங்களிதழ்—ஆண்டு மலர் [விலை 0-37 பக் 128]

திருப்பனந்தாள் காசிமடத்தின் சார்பில் 22 ஆண்டுகளாக வெளிவரும் இவ்விலக்கியத் திங்களிதழ் சைவ சமயத்திற்கும் செந்தமிழ் மொழிக்கும் சீரிய தொண்டாற்றி 23 ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் மலராகப் பூத்து மணக்கிறது சமய இலக்கியம் திருமுறை விளக்கம் இலக்கிய இலக்கணக் கட்டுரைகள் கல்வெட்டு முதலியவற்றின் ஆராய்ச்சிக் கருத்துக்களைக் கல்வி நலஞ் சான்ற பெருமக்கள் எழுதியுள்ளார்கள். கொங்குதேர் வாழ்க்கை விரும்புவோர்க்குப் பெருவிருந்தாகும் இவ்விதழ் மேலும் மேலும் பொலிவுறக் குமரகுருபரனடி மலர் போற்றி வாழ்த்துகின்றேம்.

நான்மணிக்கடிகை சித்திரத் தெளிவுரை & உரை இலக்கணம்

ஆசிரியர்: புலவர் இ தேவநேயச்சித்திரன்
விலை ; [இரு நூல்களும்] ரூ 2—40 பக்கம் 68
வெளியீடு : சித்திரச் செல்வி பதிப்பகம்
வடக்கநந்தல் — தென்னார்க்காடு.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாக விளம்பி நாக நாகனார் செய்த நான் மணிக்கடிகை யென்னும் இந் நூல் அறம் முதலாய நாற்பொருளையும்பற்றி ஒவ்வொரு பாவிலும் நந்நான்கு உண்மைகளை நவில்கின்றது வெண்பாவாலான இந்நூல் ஓரளவுக்கு எளிய நடையுடையதாயினும் யாவரும் பயின்று தெளியும் வகையில் புலவர் பெருமக்கள் சிலர் உரை வரைந்துள்ளார், இந்நூற்பாடல்கள் பல பள்ளி மாணவர் பயிலத் தேர்ந்துள்ளமையின் மேலும பல உரை விளக்கங்கள் வரல் இயல்பேயாம். இந்நெறியில் புலவர் இ தேவநேயச்சித்திரன் அவர்கள் சித்திரத் தெளிவுரை என்றபெயரில் இவ்வுரையை வரைந்துள்ளார். இவ்வாசிரியர் உரையின் தன்மையுண்மைகளைத் தெரிவிக்குமுகத்தான் இயற்றிய உரை இலக்கண அளவையைக் கொண்டே அதற்கோர் இலக்கியமாகவும் வரைந்துள்ளதாகத் தம் படைப்புரையுள் விளம்புகின்றார்.

இவ்வுரையிலக்கணம் உரையென்னும் சொற்குப் பொருள் உரையின் பெயர், வகை. உரையாளரியல்பு அமைவு என்னும் பிரிவுகளோடு பத்து நூற்பாக்களால் ஆகியுளது. தெளிவுரைக்கு இவர் கூறும் இலக்கணம் "இருநிலைப் பொருளார் முழுநிறைக் கோவை. முருகுறத்தெரிப்பன தெளிவுரையாமே" என்பதாம் இந்நெறியே இச்சித்திரத் தெளிவுரையை இயற்றியதாகச் சாற்றுகின்றார். இவ்வுரை சொற்பொருள் வரையாமல் கருத்து விளக்கமாக அமைந்துளது. நூலிறுதியில் குறிப்பும். நூலில் உள்ள முரணும் அரணும் பற்றிய கருத்தும் காணப் படுகின்றன. உரைநடை ஒரு புதிய போக்கில் அமைந்துள்ளமையின் எல்லோரும் எளிதாகப் புரிந்துகொள்ள இயலுமா என்பதும், சில சொல்லாக்கங்கள் தமிழ் மரபிற் கொத்தவையா என்பதும் ஐயத்திற்குரியவாம் சில சொற்கள் வழங்கிவரும் அகராதிகளால் தெளிய வாய்ப்பில்லாமையான் அவற்றைப் பெரிதும் வழக்குச் சொற்களால் விளக்கி ஓர் அகரவரிக்குறிப்பு எழுதியிருந்தால் பயன் தருமோ எனக் கருதவேண்டியுளது. அச்சுப் பிழையும் சில சந்திப் பிழைகளும் காணப்படுகின்றன. நூற் கருத்தைப் பொதுவாக யாவரும் உணரவும் மாணவர்கள் பயின்று தெளியவும் வாய்ப்பான தொருபுத்துரை வரைந்த இவ் ஆசிரியர் மேலும் பல ஆக்கமான தமிழ்ப் பணிகளைச் செய்து சிறப்பார்களாக.

உமாமகேசுவர உயர்நிலைப்பள்ளி

மாணவர் இலக்கியமன்ற 31-ஆம் யாண்டு

நிறைவு விழா

கரந்தைத் தமிழ்ச் சங்கக் கல்வி நிலையங்களுள் ஒன்றாகிய உமாமகேசுவர உயர்நிலைப்பள்ளியின் மாணவர் இலக்கிய மன்ற 31-ஆம் யாண்டு நிறைவு விழா, பங்குனித் திங்கள் 4-ஆம் நாள் (17—3—72) வெள்ளிக்கிழமை மாலை 4-30 மணியளவில் சங்கத் தமிழ்ப் பெருமன்றத்தில் நிகழ்ந்தது பள்ளித் தலைமையாசிரியர் திரு. நா. பாலசுப்பிரமணியன். B. A.. B. T., அவர்கள் வந்திருந்தாரை வரவேற்றுத் தலைவர்க்கும் சொற் பொழிவாளர்க்கும் மலர்மாலைகள் அணிவித்தார்கள் விழா வுக்குத் தலைமையேற்ற தஞ்சாவூர் மூத்த இளவரசர், அரண் மனைப் பரம்பரை அறங்காவலர், அரசர் பெருந்திரு. இராஜாராம ராஜா சாகேப் அவர்கள் தம் தலைமையுரையில் ''வெள்ளையர்கள் இந்த நாட்டை ஆண்டபோது தமிழுக்காகவும் தமிழர்க்காகவும் த. வே. உமாமகேசுவரம் பிள்ளையவர்கள் செய்த தொண்டுகள் அளவிட முடியாதவை என்றும். அவரோடு பழகிய நாட்கள் இனிமையானவை'' என்றும் கூறி முடித்தார்கள். சிறப்புச் சொற்பொழிவாற்றிய பூண்டி. புட்பங் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் திரு. G. R. கிருட்டினமூர்த்தி. M. A. B. T., அவர்கள் 'கவிதை இன்பம்'' என்ற தலைப்பில் அரிய பல கதைகளைக் கூறிக் கவிதைகள் உண்மை வடிவானவை உணர்ச்சி வடிவானவை என்று விளக்கினார்கள் தலைவர், முடிவுரை நிகழ்த்திய பின்னர். மாணவர் இலக்கிய மன்றத்தின் சார்பில் நடத்தப்பெற்ற குறள் ஒப்பித்தல் போட்டி. கட்டுரைப் போட்டி. பேச்சுப் போட்டி, ஓவியப் போட்டி முதலியவற்றில் வெற்றிபெற்ற மாணவ மாணவியர்க்கு மன்றச் சார்பில் உள்ள பரிசுகளை யும், சங்கநினைவு நிதிப் பரிசுகளையும், ஆசிரியர்களால் அளிக் கப்பெற்ற பரிசுகளையும் வழங்கினார்கள். பள்ளித் தமிழாசிரியர். வித்துவான். திரு. மீ. இராமதாசு அவர்கள் நன்றிநவில நாட்டு வாழ்த்துடன் விழா இனிது நடந்தேறியது.

தமிழ் மொழி வளர்ச்சியில் ஒரு கூறு

சென்ற இதழ்களின் தொடர்ச்சியாக மின்சாரத் துறையில் வழங்கும் சொற்களுக்கும், வழக்காற்றில் உள்ள இன்றியமையாச் சில சொற்களுக்கும் தமிழ்ச் சொற்கள் இவ்விதழில் வெளியிடப் பெறுகின்றன. இவற்றைப் பயில்வார் பயன்படுத்துவாராக. எவையேனும் சில சொற்களுக்குத் திருத்தங்கள் ஏற்றனவெனக் கருதினுல் வழக்கம்போல் அன்பர்கள் அவைகளை தி எழுயனுப்ப வேண்டுகிறேம்

கரண்ட்	—	மின்னேட்டம்
பல்பு	—	மின்குமிழி
டியூப்லைட்	—	குழல் மின் விளக்கு
சுவிச்சு	—	விசை
எலக்டிரிக் வயர்	—	மின் கம்பி
மீட்டர்	—	அளவுகாட்டி
பிளக்	—	செறிவி, செறிப்பு
ஷாக்	—	அதிர்ப்பு, அதிர்ச்சி
யூனிட்	—	மின்னலகு
ஒல்ட்	—	மின்னுற்றல்
வாட்	—	மின் வரையளவு
பியூசு	—	ஆசு
சாம்பிள்	—	எடுத்துக்காட்டு
Soda water	—	உப்பியல் நீர்
Chance	—	வாய்ப்பு
சந்தோஷம்	—	மகிழ்ச்சி, உவகை
சிரமம்	—	தொல்லை, இடர்
அவசியம்	—	இன்றியமையாமை.
டம்ளர்	—	குவளை
Stove — ஸ்டவ்	—	காற்றடுப்பு, எண்ணெய் அடுப்பு
Bottle	—	குப்பி
யதார்த்தம்	—	உண்மைப் பொருள்
பிரச்சினை	—	சிக்கல்
சௌகர்யம்	—	நலம், ஒல்லும் நிலை, வாய்ப்பு
அர்த்தம்	—	பொருள்
லட்சணம்	—	அமைப்பு
பத்தியம்	—	உணவுக் கட்டுப்பாடு
விரதம்	—	நோன்பு
எவர்சில்வர்	—	போலி வெள்ளி

மணிபர்சு	—	பணப்பை
டார்ச்சு லைட்	—	கையின் விளக்கு
டிரைவர்	—	ஓட்டுநர், வலவர்
Gate	—	வாயில்
Road	—	சாலை
Ice	—	பனிக்கட்டி
ஐஸ்கிரீம்	—	பனிப்பாகு, பனிப்பாலேடு
Thanks	—	நன்றி
இஷ்டம்	—	விருப்பம்
அயிட்டம்	—	வகை
பலகாரம்	—	தின்பண்டம்
அபிஷேகம்	—	முழுக்கு
சகுனம்	—	புட்குறி, முன்னம்
யோகம்	—	ஒன்றுதல்
ஸ்தலம்	—	இடம், பதி
யோசனை	—	நினைவு, நெடுநினைவு, எண்ணுதல்
மைனர்	—	இளைஞர்
மேஜர்	—	குமரர்
சீல்	—	முத்திரை
ஆபத்து	—	ஏதம், இடையூறு
இலவசமாக	—	விலையின்றி
இலவசம்	—	விலையிலி
கண்டிஷன்	—	கட்டுப்பாடு. கட்டாயம், நிலைமை
கௌரவம்	—	மதிப்பு
சர்க்கஸ்	—	வித்தை, சுழல் விளையாட்டு
சர்பத்	—	சுவைநீர்
லைசென்ஸ்	—	உரிமம்
சோப்	—	உவர்க்கட்டி, தூயம்
Tour	—	பயணம், செலவு
பிடிவாதம்	—	மாருமை
டயர்	—	உருள் ஆரை, வட்டு உறை
டியூப்	—	குழல்
(Chain) செயின்	—	தொடர்
டிராக்டர்	—	விசைக் கலப்பை
பஞ்சர்	—	துளை
Operation	—	அறுவை மருத்துவம்
டானிக்	—	ஊட்ட உணவு
கமிஷன்	—	தரகு, கழிவு.
தராசு	—	சீரை.